**Crimp No.102/2025**
**in**
**SC.No.246/2017**

**Date: 11.03.2026**

**Order pronounced.**

மனுதாரர்/4வது எதிரி இம்மனுவை பிரிவு 311 கு.வி.மு.ச–வின் கீழ் அ.சா.2ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்க கேட்டு தாக்கல் செய்துள்ளார்.

2) அரசு தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. எதிருரைதாக்கல் செய்யப்பட்டது. இருதரப்பும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

3) மனுதாரர் தனது மனுவில் கடந்த 28.06.2023ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்ட அ.சா.2ஐ அன்றைய தினம் 4வது எதிரியின் வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லாததாலும், சில ஆவணங்கள் கிடைக்காததாலும், குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என காரணம் குறிப்பிட்டுள்ளார்.

4) வழக்கு ஆவணங்களை பரிசீலித்து பார்த்த போது 28.06.2023ம் தேதி அ.சா.2 முதல் விசாரணை செய்யப்பட்ட பிறகு அன்றைய தினம் அவரது குறுக்கு விசாரணை மனுவின் பேரில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. பின்னர் 04.12.2024ம் தேதி அ.சா.2 குறுக்கு விசாரணைக்காக ஆஜர்படுத்தப்பட்ட போது ஏன் அ.சா.2ஐ இம்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்பதற்கு மனுதாரர் தரப்பில் எவ்வித காரணமும் குறிப்பிடவில்லை. இதர எதிரிகள் தரப்பில் அன்றைய தினம் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

5) மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணம் ஏற்புடையதாக இல்லை என்றாலும் கூட அ.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய மனுதாரரை அனுமதிக்காவிடில் மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியா இழப்பு ஏற்படும். மனுதாரரால் வழக்கு விசாரணையில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு தகுந்த செலவுத்தொகை விதித்து இம்மனுவை அனுமதிக்கலாமென இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர் செலவுத்தொகையாக ரூ.2,000/– மாவட்ட சமரச மையத்திலும் சாட்சி படி ரூ.1000/–த்தை இந்நீதிமன்றத்திலும் 25.03.2026ம் தேதிக்குள் செலுத்தி வைக்கும் பட்சம் மனு அனுமதிக்கப்படும் தவறினால் தள்ளுபடி செய்யப்படும்.

மீண்டும் அழைக்க வாய்தா 01.04.2026.

சார்பு நீதிபதி,
பத்மனாபபுரம்